## மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)

## மதுவரி அறிவித்தல் இல: 999

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 2 ஆம், 12 ஆம் மற்றும் 25 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், பின்வரும் விதிகளைப் பிரகடனப்படுத்துகிறேன்.

இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்படுகின்ற குடிபானமல்லாத ஸ்பிரித்து கிலோ கிராம் ஒவ்வொன்றிற்குமாக மதுவரித் தீர்வையாக ரூபா. 25.00 இனை 2017.11.10 .ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் இத்துடன் குறிப்பீடுசெய்யப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய அறவிடப்படுதல் வேண்டும்.

மங்கள சமரவீர

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

கொழும்பு -01

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

2017.11.09 ஆம் திகதி

### விதிகள்

**1.**

I. இங்கு அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்டிருக்கும் மதுசார வகைகள் அனைத்தும் மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் - 52) இன் ஏற்பாடுகளின் நோக்கங்களுக்காக மதுபானம் என பிரகடனப்படுத்துகிறேன்.

II இவ்விதிகள் ‘‘குடிபானமல்லா ஸ்பிரித்துக்களுக்கான விதிகள்’’ என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், இந்த ஒழுங்குவிதிகலானவை 2017.08.01 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும். இவ்வறிவித்தல்களின் ஏற்பாடுகள் குடிபானமல்லா ஸ்பிரித்து, இயல்புநிலை மாற்றப்பட்ட ஸ்பிரித்து மற்றும் வெல்லப்பாகுகள் என்பனவற்றுடன் ஏற்புடையதான நடைமுறையிலுள்ள கட்டளைகளை எவ்விதத்திலும் பாதித்தலாகாது.

**2**. பொருட்கோடல் :

I. ஏதேனும் கூட்டுச்சேர்கை ஒன்றில், இரசாயன சூத்திர (IUPAC பெயரிடல் முறைக்கு அமைய)அடிப்படையில், அலிபடிக் காபன் அணுத் தொகுதியொன்றுடன் ஹைட்ரோகஸில் (-OH) அணுத்தொகுதியினை கூட்டுச் சேர்க்கும் போதான அத்தகைய கூட்டுச்சேர்கைகளை அல்கஹோல் (மதுசாரம்) என அறியப்படுகின்றது.

II. எதன்.1ஒஎல் (ஈதைல் மதுசாரம் / எதனோல்) என்பன குடிபானமாக பயன்படுத்தத்தக்க ஸ்பிரித்துக்கள் எனவும் இங்கு அட்டணை 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து வகை மதுசாரங்களும் ‘‘குடிபானமல்லா ஸ்பிரித்துக்கள்’’ எனவும் குறிப்பிடப்படுகின்றது.

III. விளக்கம் :

| IUPAC பெயரிடல் முறை | இரசாயன சூத்திரம் | இ.ப.குறியீடு இல. | பொதுப் பெயர்/ பெயர்கள் |
|---|---|---|---|
| எதன்.1ஒஎல் | $CH_3$-$CH_2$-OH | 2207.10 | (எதனோல்/ ஈ தைல்/ ஈதைல் மதுசாரம் ) |

3.

I. மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் (இதனகத்துப் பின்னர் ‘‘ஆணையாளர் நாயகம்’’ என குறிப்பீடு செய்யப்படுகின்ற) அவரது பணிகள் பொருட்டு எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, ஆள் எவரும் குடிபானமல்லாத ஸ்பிரீத்து வகைகள் எதனையும் இறக்குமதிசெய்தல், ஏற்றுமதி செய்தல், உற்பத்திசெய்தல், உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனைசெய்தல், கொண்டுசெல்லல், பயன்படுத்துதல், விற்பனைக்காக முன் வைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் ஆகாது. ஏதேனும் உரிமம் அல்லது அனுமதிச்சீட்டு பொருட்டான கோரிக்கை ஒவ்வொன்றும் ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவை இந்த விதிகளின் அட்டவணை II இல் காட்டப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்படுதல் வேண்டும்.

II. குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களை இறக்குமதிசெய்தல், ஏற்றுமதிசெய்தல், உற்பத்திசெய்தல், உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனைசெய்தல், கொண்டுசெல்லல், பயன்படுத்துதல், விற்பனைக்காக முன் வைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் பொருட்டான விண்ணப்பம் கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஆணையாளர் நாயகம், கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் ஒவ்வொரு உரிம வகுதிக்கு ஏற்புடைய வகையில் குறித்துரைக்கப்பட்ட வழிகாட்டல்கள் மற்றும் நிபந்தனைகள் என்பன குறித்து திருப்திப்படின் அட்டவணை IV இல் காட்டப்பட்டுள்ள I, II, III மற்றும் IV ஆம் படிவங்களுக்கிணங்க, அனுமதிச்சீட்டினை சந்தர்ப்பத்துக்கேற்றவாறு விண்ணப்பதாரருக்கு வழங்குதல் வேண்டும்.

III. மது வரி ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் அல்லது உரிமம் அத்தகைய உரிமம் அல்லது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வருட (பஞ்சாங்க வருட) காலத்துக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

IV. இவ்விதிகளின் பிரகாரம் உரிமமொன்றை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்கின்ற ஆள் ஒருவர் இத்துடன், இவ்விதிகளின் அட்டவணை III இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள உரிமக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

V. இந்நோக்கங்களுக்காக மேற்குறித்த ஒழுங்கு விதிகளின் (1)ஆம் உட்பிரிவின் நியதிகளுக்கு அமைய, ஆணையாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உரிமமொன்றின் கீழ், ஆணையாளர் நாயகம் காலத்துக்குக் காலம் விதித்துரைக்கப்பட்டாலன்றி, பொருளின் இயல்பு மாற்றி சேர்கையாகப் பயன்படும் ஏதேனும் பிறிதொரு பொருளை விகிதாசாரத்திற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட அளவில் சேர்த்தாலேயன்றி குடிபானமல்லா மதுசார வகை எதனையும் உடைமையில் வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல், கொண்டுசெல்லல், விற்பனைக்காக முன் வைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளலாகாது. அவ்வாறே, அனுமதிப்பத்திர உரிமையாளர் ஒருவர் அமுலிலுள்ள மதுவரி சட்ட திட்டங்களுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட அளவில் பொருளின் இயல்பு மாற்றி சேர்கையாகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் பிறிதொரு பொருள் சேர்கையினை தனது சொந்த செலவில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆயினும், மேற்குறிப்பிடப்பட்ட பொருள் இயல்பு மாற்றி சேர்கை நடைமுறையானது குடிபானமல்லாத மதுசாரத்தினை விஞ்ஞானம் அல்லது ஆராய்ச்சி சார்ந்த நடவடிக்கைகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட அரச திணைக்களம் அல்லது நிறுவனமொன்றினால் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் அல்லது குறித்த மதுசாரத்தை பயன்படுத்துவதற்குத் தேவையான சந்தர்ப்பம் ஏற்படின், மேற்குறித்த இரசாயன பொருள் இயல்பு மாற்றி சேர்கை நடைமுறையானது ஆணையாளர் நாயகத்தினால் கைவிடப்படலாம்.

VI. சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சட்டத்தின் 3ஆம் விதியின் கீழ், உரிமம் வழங்கப்பட்ட உரிமையாளர் ஒருவர்,

(அ) குறித்த வளாகத்தினுள் களஞ்சியப்படுத்துவதற்கு ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்பட்டுள்ள, அத்தகைய உரிமத்துடன் ஏற்புடையதான குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்கள் நீங்கலாக, வேறேதும் மதுபானங்கள் களஞ்சியப்படுத்தப்படவில்லை எனவும், உரிமப் பத்திரமானது குடிபானமல்லாத மதுசாரங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ளன எனவும், அந்த ஸ்பிரித் வகைக்கோ எந்தவித மதுசார வகையும் சேர்க்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(ஆ) குடிபானமல்லாத ஸ்பிரித்துகள் உள்ளடங்கிய ஏதேனும் மதுசார லேகர், பெரல், பீப்பா, பாத்திரம், போத்தல் அல்லது அத்தகைய கொள்கலன்கள் என்பன அட்டவணை V இல் காட்டப்பட்டவாறு மும்மொழிகளில் வெள்ளை பின்னணியில் சிகப்பு நிறத்தில் அச்சிட்ட சுட்டுந்துண்டு ஒன்று ஒட்டப்பட்டுள்ளது என்பதனையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

VII. உரிமம் பெற்ற ஒவ்வொரு உரிமையாளரும் உரிமை வழங்குவதோடு சம்பந்தப்பட்ட உரிமத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் மற்றும் குறித்த உரிமத்தோடு தொடர்புபற்ற மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் அல்லது அறிவித்தல்களில் குறித்துரைக்கப்பட்ட ஏனைய வழிகாட்டல்கள் அல்லது நிபந்தனைகள் என்பனவற்றிற்கு அமைய கட்டுப்படுதல் வேண்டும்.

VIII. மேற்குறித்த விதிகளிலுள்ள ஏதேனும் ஏற்பாடொன்று மீறப்பட்டுள்ளதா என்பதனை கண்டறிவதற்காக பகுப்பாய்வு செய்யும் நோக்கில் குடிபானமில்லாத மதுசாரத்தின்

மாதிரிகளை இலவசமாக பெறுவதற்கான அதிகாரம் மதுவரி பரிசோதகர் பதவியில் மேல் நிலை உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது எவரேனும் மதுவரி அலுவலருக்கு உண்டு. அத்தகைய சந்தர்ப்பங்களில் ஆணையாளர் நாயகம் அங்கீகரிக்கக்கூடியவாறான அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடமிருந்து அல்லது ஏனைய ஆய்வுகூடம் ஒன்றிலிருந்து சான்றிதழ் ஒன்றினைப் பெற்று சமர்ப்பித்தல் வேண்டும்.

IX. உரிமத்தில் அல்லது அனுமதிச்சீட்டில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வளாகத்தில் குடிபானமில்லாத ஸ்பிரீத்தினை களஞ்சியப்படுத்தல் செயற்பாடானது மதுவரி அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் அதற்கென குறித்தொக்கப்பட்ட பிரதேசத்தில் மாத்திரம் இடம்பெறுதல் வேண்டும் என்பதுடன் குறித்த களஞ்சியசாலையானது உரியவாறு முறையாக பூட்டுப் போட்டு மூடி வைக்கப்படுதல் வேண்டும்.

4. இறக்குமதி அல்லது ஏற்றுமதிக்காக வருடாந்த உரிமம் ஒன்றினைப் பெற்றதன் பின்னர் குடிபானமில்லாத ஸ்பிரீத்தினை இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இங்கு II ஆம் அட்டவணையில் II ஆம் மாதிரிப் படிவத்திற்கு அமைய விண்ணப்பித்தல் வேண்டும். குறித்த விண்ணப்பம் தொடர்பில் ஆணையாளர் நாயகம் திருப்தியுறும் பட்சத்தில் இங்கு அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள குடிபானமல்லாத ஸ்பிரித்துகளுக்கு மத்தியில் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தலிலுள்ள ஒழுங்குவிதிகள் மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்வதற்காக விதிக்கப்பட்டுள்ள மதுசாரத்திற்காக மாத்திரம் VI ஆம் அட்டவணையில் I ஆம் மாதிரிப் படிவத்திற்கு அமைவான அனுமதியினை ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டாளருக்கு வழங்குதல் வேண்டும். ஆட்டவணை I இல் குறிப்பிடப்பட்ட மேற்குறித்த குடிபானமில்லாத ஸ்பிரீத்து இலங்கை சுங்கத்தினை வந்தடைந்ததும் இங்கு VI ஆம் அட்டவணையில் II ஆம் மாதிரிப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட கடிதத்தினை இலங்கை சுங்கத திணைக்களத்தின் அதிகாரம் பெற்ற அலுவலர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட்டு குறித்த ஸ்பிரீத்து விடுவிக்கப்பட முன்னர் ஆணையாளர் நாயகத்தினால் ஸ்பிரீத்தினை கொண்டுசெல்வதற்காக VI ஆம் அட்டவணையில் III ஆம் மாதிரிப் படிவத்தில் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம் ஒன்றும் வழங்கப்படுதல் வேண்டும்.

5. இவ்வறிவித்தலின் கீழுள்ள பிரிவுகள், நிபந்தனைகள் மற்றும் இவ்வறிவித்தலின் கீழ் வெளியிடப்பட்டுள்ள உரிமங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்கள் என்பனவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீறப்படும் பட்சத்தில் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 56 மற்றும் 48 ஆம் பிரிவுகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

6. 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதிய 291/iii ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 721 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

**<u>அட்டவணை</u> 1**

| IUPAC பெயரிடல் முறை | இரசாயன சூத்திரம் | இ.ப.குறியீடு இல. | பொதுப் பெயர்/ பெயர்கள் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| மெதைல் -1. ஓஎல் | $CH_3$-OH | 2905.11 | மெதனோல்/மீதைல் மதுசாரம்) |
| புறோபேன் -1.ஓஎல் | $CH_3-CH_2-CH_2-OH$ | 2905.12 | புறோபைல் மதுசாரம்/<br>புறோபனோல் |
| புறோபேன் -2.ஓஎல் | $CH_3-CH-OH$<br>$CH_3$ | 2905.12 | 2.புறோபைல் மதுசாரம்/<br>ஐசோபுறோபைல் மதுசாரம் |
| பியூற்றன் - 1.ஓஎல் | $CH_3-CH_2-CH_2-CH_2-$<br>OH | 2905.13 | என்.பியுற்றைல் மதுசாரம்/<br>பியூற்றனோல் |
| 2. மெதைல்<br>புறோபேன் -1.ஓஎல் | $CH_3-C_1H_1-CH_2-OH$<br>$CH_3$ | 2905.14 | ஐசோபியூற்றனோல்/ஐசோபியூடைல் மதுசாரம் |
| பியூற்றன் - 2.ஓஎல் | $CH_3-CH_2-CH-CH_3$<br>OH | 2905.14 | இடைநிலை பியுற்றைல் மதுசாரம் |
| 2. மெதைல்<br>புறோபேன் -2.ஓஎல் | $CH_3$<br>$CH_3-C-OH$<br>$CH_3$ | | மூன்றாம்நிலை பியுற்றைல் மதுசாரம் |

**அட்டவணை II**

**படிவம் 1**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

## மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)

## குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களுக்கு அனைத்து வகையான உரிமங்களையும் பெற்றுவதற்கான விண்ணப்பப்படிவம்

**(**விண்ணப்பதாரர் **1** முதல் **7** வரையான விடயங்களை மாத்திரம் நிரப்புதல் வேண்டும்**)**

1. விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள், கம்பனியின் பெயர் மற்றும் முகவரி:-
   ..........................................................................................................
2. விண்ணப்பதாரர் /விண்ணப்பதாரர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் (இலக்கங்கள்)
   ..........................................................................................................
3. வியாபார பதிவு இலக்கம்:-
   ..........................................................................................................
4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை இலக்கம;:-……………………………………..
5. ஸ்பிரித்துக்களை களஞ்சியப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்ட இடம் தொடர்பான தகவல்கள்:-
   - I. தபால் முகவரி :
   - II. மாகாண சபை :
   - III. நிருவாக மாவட்டம்:
   - IV. பிரதேச செயலாளர் பிரிவு:
   - V. உள்ளூராட்சி சபை:
   - VI. பொலிஸ் பிரிவு:
   - VII. மதுவரி நிலையம் :
6. விண்ணப்பதாரர்/ விண்ணப்பதார்கள் குடிபானமல்லாத ஸ்பிரித்து வகைகளை இறக்குமதி செய்ய/ஏற்றுமதிசெய்ய /தயாரிக்க /களஞ்சியப்படுத்த/விற்பனை செய்ய உத்தேசித்திருப்பின், அவர்/அவர்கள் பின்வரும் தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

   - i. இறக்குமதிசெய்யப்பட்ட/ ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்பிரித்து வகைகளின் பெயர் :-
     - அ. IUPAC பெயரிடல் முறை
     - ஆ. இரசாயன சூத்திரம்
     - இ. இ.ப.குறியீடு இல.
   - ii. இறக்குமதியின் நோக்கம் :-
   - iii. முன்னைய ஆண்டுடன் காலத்திற்கு காலம் இறக்குமதிசெய்யப்பட்ட/ ஏற்றுமதி செய்யப்பட்ட /தயாரிக்கப்பட்ட /களஞ்சியப்படுத்தப்பட்ட/ விற்பனை செய்யப்பட்ட ஸ்பிரித்துக்களின் விபரம் (விபரம் இணைக்கப்படல் வேண்டும்)
   - iv. விண்ணப்பதாரர் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் குற்றவாளி அல்ல என்பதற்கான சத்தியக்கடதாசி:(இணைக்கப்படல் வேண்டும்)
   - v. சுற்றாடல் அறிக்கை (இறக்குமதி, தயாரிப்பு என்பனவற்றின் பின்னர் மொத்தமாக தயாரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் மாத்திரம்)
   - vi. கையிறுப்புக்களை களஞ்சியப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்ட இடத்தின் எல்லைகள்

வடக்கு:-

கிழக்கு:-

தெற்கு:-

மேற்கு:-

7.

I. தொகையிறுப்பினை பெற்றக்கொள்வதற்கான வழிமுறை (இறக்குமதி/மொத்த விற்பனையாளர் மூலம்)

II. மேற்குறித்த கம்பனியின் பெயர், முகவரி

திகதி :- ......................................  ......................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

(*அலுவலக பாவனைக்கு மட்டும்*)

8 குறித்த மதுவரி அலுவலக பொறுப்பதிகாரியின் கையொப்பம் விதிப்புரை:-

..........................................................................................................................................

திகதி :- ..........................................  .....................................................................

அலுவலக பொறுப்பதிகாரியின் கையொப்பம்

9 மதுவரி அத்தியட்சகரின் விதிப்புரை

..........................................................................................................................................

திகதி :- ..........................................  .....................................................................

மதுவரி அத்திகாரியின் கையொப்பம்

10 உதவி மதுவரி ஆணையாளரின் விதிப்புரை :-

..........................................................................................................................................

திகதி :- ..........................................  .....................................................................

உதவி மதுவரி ஆணையாளரின் கையொப்பம்

11 பிரதி மதுவரி ஆணையாளரின் விதிப்புரை :-

..........................................................................................................................................

திகதி :- ..........................................  .....................................................................

பிரதி மதுவரி ஆணையாளரின் கையொப்பம்

12 மதுவரி ஆணையாளரின் விதிப்புரை :-

..........................................................................................................................................

திகதி :- ..........................................  .....................................................................

மதுவரி ஆணையாளர் நாயகத்தின் கையொப்பம்

**அட்டவணை II**

**படிவம் II**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)**

**குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இறக்குமதி செய்வதற்கு /ஏற்றுமதி செய்வதற்கான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கான விண்ணப்பப்படிவம்**

**(**விண்ணப்பதாரர் **1** முதல் **6** வரையான விடயங்களை மாத்திரம் நிரப்புதல் வேண்டும்**)**

1. விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரகள், கம்பனியின் பெயர் மற்றும் முகவரி:-

   ..........................................................................................................

2. விண்ணப்பதாரர் /விண்ணப்பதாரர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் (இலக்கங்கள்)

   ..........................................................................................................

3. வியாபார பதிவு இலக்கம்:-

   ..........................................................................................................

4. வரி செலுத்துவோர் அடையாள அட்டை இலக்கம்:-.......................................................

5. ஸ்பிரித்துக்களை களஞ்சியப்படுத்துவதற்கு அங்கீகாரம் பெற்ற இடங்கள் தொடர்பான தகவல்கள் உத்தேசிக்கப்பட்ட இடம் தொடர்பான தகவல்கள்:-

   i. தபால் முகவரி : ..............................................
   
   ii. மதுவரி நிலையம் ..............................................

6 விண்ணப்பதாரர்/ விண்ணப்பதாரர்கள் குடிபானமல்லாத ஸ்பிரித்து வகைகளை இறக்குமதி செய்ய/ஏற்றுமதிசெய்ய உத்தேசிப்பின் அவர்/அவர்கள் பின்வரும் தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

   I இறக்குமதிசெய்யப்பட்ட/ ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்பிரித்து வகைகளின் பெயர் :-

      அ. IUPAC பெயரிடல் முறை:-

      ஆ. இரசாயன சூத்திரம்:-

      இ. இ.ப.குறியீடு இல:-

      ஈ. அற்கஹோல் சதவீதம் மற்றும் அளவு:-

   II ஸ்பிரித்து ஏற்றுமதி செய்யப்பட்ட/இறக்குமதி செய்யப்பட்ட நாடு

   III குறித்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட/ ஏற்றுமதி செய்யப்பட்ட ஸ்பிரித்துக்களின் அளவு (விபரம் இணைக்கப்படல் வேண்டும்)

   iV இறக்குமதி/ஏற்றுமதி உத்தேசிக்கப்பட்ட திகதி

7. அனைத்து விண்ணப்பங்களும் அலுவலக பொறுப்பதிகாரி, மதுவரி அத்தியட்சகர் மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் என்போரது விதிப்புரையுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

திகதி :- .......................................  ......................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**அட்டவணை III**

3(2) ம் விதி

**உரிமக் கட்டணம்**

| | நிரல் I<br>**உரிமத்தின் தன்மை** | நிரல் II<br>**உரிமக் கட்டணம்** |
|---|---|---|
| 1. | குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக் களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனை | ரூபா.50,000.00 |
| 2. | குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக இறக்குமதி செய்தல், களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனைக்கான உரிமம் | ரூபா.50,000.00 |
| 3 | ஏற்றுமதிக்கான உரிமம் | ரூபா.10,000.00 |
| 4 | குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை களஞ்சியப்படுத்தல் மற்றும் சில்லறை விற்பனைக்கான உரிமம் | ரூபா.5,000 |

**அட்டவணை IV**

படிவம் 1

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52)

(மதுவரிக் கட்டளைச் சட்டம் பிரிவு 12)

உரிமக் கட்டணம் : …………………

உரிமப் பத்திரமானது 20 ………… முதல் 20…………… வரை செல்லுபடியாகும்.

1. இறக்குமதியாளர் / ஏற்றுமதியாளரின் பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

   ……………………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………………
2. கம்பனி பதிவு இலக்கம் :- ……………………………………………………………
3. ஏற்றுமதி / இறக்குமதிசெய்யப்படுகின்ற நாடு:-

   ……………………………………………………………………………………………………………………
   ……………………………………………………………………………………………………………………
4. இறக்குமதிசெய்யப்படுகின்ற பொருட்கள் பற்றிய விபரம் :-

| **இறக்குமதி செய்யப்பட்ட ஸ்பிரீத்தின் பெயர்** | **விஞ்ஞான முறைப் பெயர்** | **இயைபு முறைக் குறியீடு (இ.மு.குறியீடு)** | **அளவு (கி.கி.இல்) (வருடாந்தம்)** |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | | | |

5.

i. மதுவரிக் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 52) இன் கீழ் எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, மேலே விடய இலக்கம் 4 இல் வியரிக்கப்பட்டுள்ள குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை ஏற்றுமதி/இறக்குமதிசெய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

ii. இத்தாளின் மறுபக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய இந்த உரிமம் வழங்கப்படுகிறது.

திகதி:…………………………..                                        ………………………………..

மதுவரி ஆணையாளர்

1. எந்த வளாகத்திற்கு இந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வளாகத்திற்கு அதேபோன்று உரிமத்தில் குறிப்பாக காட்டப்பட்டுள்ள பணி பொருட்டும் மட்டுமே இந்த உரிமம் செல்லுபடியாகும்.
2. உரிமம் கைமாற்றப்படலாகாது என்பதுடன் உரிமத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் தொடர்பானது உரிமம் வழங்கும் அதிகாரியின் சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது குத்தகைக்கு விடவோ ஆகாது.
3. உரிமத்துக்குரிய சகல மதுவரி விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அதேபோன்று குறித்த உரிமத்துடன் ஏற்புடையதான காலத்துக்கு காலம் மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் மேலதிக விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிக்கு இணங்க உரிமம்பெற்றவர் அமைந்தொழுகுதல் வேண்டும்.
4. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு மாத்திரம் உரிமம் நீடிக்கப்படுதல் வேண்டும்.
5. கணக்கு வைத்தல்- குடிபானமல்லாத ஸ்பிரீத்து ஏற்றுமதியாளர்/இறக்குமதியாளர் ஒவ்வொருவரும், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பாக காட்டப்பட்ட படிவத்தில் உரிய கணக்குப் புத்தகங்களை பேணுதல் வேண்டும். இந்த விதியின் கீழான அறிவித்தலொன்று தமது வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் வளாகத்தின் நிகழ்கால தலைவருக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கையளித்திருப்பின் அல்லது வளாக கதவில் ஒட்டியிருப்பின் குறித்த அறிவித்தலானது உரிமப்பத்திரதாரருக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படல் வேண்டும்.
6. மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் ஏதேனும் உரிமம்பெற்ற வளாகத்தினுள் பிரவேசித்து அதனை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது நடைமுறையில் மாற்று அதிகாரத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்தல், தடைசெய்வதற்காக அல்லது சான்றொன்றைப் பெறுவதற்கு நியாயமாக நம்பத்தகுந்த ஏதேனும் மதுவரிப் பொருட்கள், வேறு பொருட்கள், பற்றுச் சீட்டுக்கள், இன்வொயிஸ் மற்றும் புத்தகங்கள் என்பனவற்றை பெறுப்பேற்கும் போது உரிமப்பத்திரதாரர் அதற்காக சகல வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும்.
7. குறித்த மது வரி நிபந்தனைக்கேற்ப செயலாற்றுவதற்கு உரிமப்பத்திரதாரர் உடன்படாவிடின், உரிமமானது ஆணையாளர் நாயகத்தினால் இரத்துச்செய்யப்படலாம். உரிமத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் உரிய அதிகாரியினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
8. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ததன் பின்னர் அதற்கான மதுவரியினைச் செலுத்துவதற்கான உரிய நடவடிக்கையினை உரிமப்பத்திரதாரர் மேற்கொள்ளுதல் வேண்டும்.
9. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ததன் பின்னர் அல்லது ஏற்றுமதி நோக்கிற்காக நகர்த்துகையில் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட உரிமப்பத்திரமின்றி மேற்கொள்ளலாகாது.
10. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அட்டவணை II இன் படிவம் II இற்கு அமைய விண்ணப்பப் படிவம் ஒன்றினை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெறுதல் வேண்டும்.

**எதிர்தரப்புடன்படிக்கை :-**

மேற்படி உரிமம்பெற்றவரான ....................................................................................... ஆகிய நான், உரிமத்தில் அடங்கியுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளை உறுதியாக கடைப்பிடிப்பேன் எனவும் நிறைவேற்றுவேன் எனவும் உரிமம் வழங்கும் அதிகாரியுடன் இத்தால் உடன்படுகின்றேன்.

..............................................

உரிமப்பத்திரதாரர் கையொப்பம்

சாட்சியாளர்கள்:-

20................மாதம்............ஆம் திகதி.

NSP – 02

**அட்டவணை IV**

**படிவம் II**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)**

குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனைசெய்வதற்காக அதிகாரம்பெற்ற வியாபாரிகளுக்கு (பிரிவு 18) வழங்கப்படுகின்ற உரிமம்.

உரிமக் கட்டணம் :.........................

உரிமப் பத்திரமானது 20 ............ முதல் 20............... வரை செல்லுபடியாகும்.

| | |
|---|---|
| மாவட்டம் :-............................................<br>வழங்கப்பட்ட திகதி :- ..................................<br>உரிமக் கட்டணம் :- .................................... | பதிவு இல.:- ................................................<br>இறுதித் திகதி:-....................................................<br>முத்திரைத் தீர்வை :-................. |
| (1)<br>உரிமப்பத்திரதாரரின் பெயர், முகவரி மற்றும் தே.அ.அ.இல. :-<br>....................................................................<br>....................................................................<br>.................................................................<br>(2)<br>கம்பனி எனில், கம்பனிப் பதிவு இல. :-<br>........................................................ | (3)<br>உரிமம் பெற்ற அமைவிட முகவரி :-<br>......................................................................<br>......................................................................<br>........................................................... |
| (4) அமைவிடம் பற்றிய விளக்கம்:- (எல்லைகள் குறிப்பிடப்படுதல் வேண்டும்)<br>.................................................................................................................................................<br>................................................................................................................................................. | |

| |
|---|
| .................. |
| (5) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் உற்பத்தி செய்வதற்காக உத்தேசிக்கப்படுகின்ற விடயங்களின் பெயர், விபரங்கள் :- |
| (6) (i) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 52) 18ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் மேலே (4) ஆம் விடயத்தில் விபரிக்கப்பட்ட அமைவிடத்தினை இத்தால் அங்கீகரிக்கப்படுவதுடன் விடயம் (5) இல் விபரிக்கப்பட் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனை என்பனவற்றிறற்காகவும் அதிகாரமளிக்கிறேன்.<br><br>(ii) பின்புறம் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இந்த உரிமம் வழங்கப்படுகிறது.<br><br>திகதி :- ............................................ ..........................................<br>மதுவரி ஆணையாளர் நாயகம் |

1. எந்த வளாகத்திற்கு இந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளதோ அந்த வளாகத்திற்கு அதேபோன்று உரிமத்தில் குறிப்பாக காட்டப்பட்டுள்ள பணி பொருட்டும் மட்டுமே இந்த உரிமம் செல்லுபடியாகும்.
2. உரிமம் கைமாற்றப்படலாகாது. உரிமத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் சம்பந்தப்பட்ட விடயம் உரிமம் வழங்கும் அதிகாரியின் சம்மதமின்றி விற்கப்படவோ அல்லது குத்தகைக்கு விடவோ ஆகாது.
3. உரிமத்துக்குரிய சகல மதுவரி சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அதேபோன்று குறித்த உரிமத்துடன் ஏற்புடையதான காலத்துக்கு காலம் மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் விதிக்கப்படக்கூடிய ஏதேனும் மேலதிக விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பனவற்றிக்கு அமைய உரிமப்பத்திரதாரர் அமைந்தொழுகுதல் வேண்டும்.
4. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு அல்லது இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு மாத்திரம் உரிமம் நீடிக்கப்படுதல் வேண்டும்.
5. கணக்கு வைத்தல்- குடிபானமல்லாத ஸ்பிரீத்து ஏற்றுமதியாளர்/இறக்குமதியாளர் ஒவ்வொருவரும், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பாக காட்டப்பட்ட படிவத்தில் உரிய கணக்குப் புத்தகங்களை பேணுதல் வேண்டும். இந்த விதியின் கீழான அறிவித்தலொன்று தமது வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் வளாகத்தின் நிகழ்கால தலைவருக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கையளித்திருப்பின் அல்லது வளாக கதவில் ஒட்டியிருப்பின் குறித்த அறிவித்தலானது உரிமப்பத்திரதாரருக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படல் வேண்டும்.
6. மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அதிகாரம்பெற்ற அலுவலரொருவர் ஏதேனும் உரிமம்பெற்ற வளாகத்தினுள் பிரவேசித்து அதனை மேற்பார்வை செய்வதற்கு அல்லது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது நடைமுறையில் மாற்று அதிகாரத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் கீழ் பறிமுதல் செய்தல், தடைசெய்வதற்காக அல்லது சான்றொன்றைப் பெறுவதற்கு நியாயமாக நம்பத்தகுந்த ஏதேனும் மதுவரிப் பொருட்கள், வேறு பொருட்கள், பற்றுச் சீட்டுக்கள், இன்வொயிஸ் மற்றும் புத்தகங்கள் என்பனவற்றை பெறுப்பேற்கும் போது உரிமப்பத்திரதாரர் அதற்காக சகல வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்குதல் வேண்டும்.
7. குறித்த மது வரி நிபந்தனைக்கேற்ப செயலாற்றுவதற்கு உரிமப்பதிரதாரர் உடன்படாவிடின், உரிமமானது ஆணையாளர் நாயகத்தினால் இரத்துச்செய்யப்படலாம். உரிமத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் உரிய அதிகாரியினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
8. பிராந்தியத்தின் மதுவரி அத்தியட்சகரினால் வழங்கப்படும் உரிமப் பத்திரமின்றி குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உரிமம்பெற்ற வளாகத்திலிருந்து கொண்டுசெல்லப்படலாகாது.

**எதிர்தரப்புடன்படிக்கை :-**

மேற்படி உரிமம்பெற்றவரான ........................................................................................ ஆகிய நான், உரிமத்தில் அடங்கியுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளை உறுதியாக கடைப்பிடிப்பேன் எனவும் நிறைவேற்றுவேன் எனவும் உரிமம் வழங்கும் அதிகாரியுடன் இத்தால் உடன்படுகின்றேன்.

..............................................

உரிமப்பத்திரதாரர் கையொப்பம்

சாட்சியாளர்கள்:-

20.......... .......மாதம்.............ஆம் திகதி.

NSP - 02

**அட்டவணை IV**

**படிவம் III**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

**குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை (மொத்தமாக/சில்லறையாக) விற்பனை செய்வதற்காக (பிரிவு 18) வழங்கப்படுகின்ற உரிமம்**

உரிமக் கட்டணம் :..........................

உரிமப் பத்திரமானது 20 ........... முதல் 20.............. வரை செல்லுபடியாகும்.

<table>
<tr><td>மாவட்டம் :-............................................<br>வழங்கப்பட்ட திகதி :- ...................................<br>உரிமக் கட்டணம் :- .....................................</td><td>பதிவு இல.:- .................................................<br>உரிமம் செல்லுபடியாகும் காலம் :-.....................<br>முத்திரைக் கட்டணம்:-.................</td></tr>
<tr><td colspan="2">(1) உரிமத்தின் வகை (மொத்த/சில்லறை):- ..........................................................<br>திறக்கப்படுகின்ற மற்றும் மூடப்படுகின்ற நேரம் :-..............................</td></tr>
<tr><td>(2)<br>உரிமப்பத்திரதாரரின் பெயர்,முகவரி மற்றும் தே.அ.அ.இல :-<br>.................................................................<br>.................................................................<br>.................................................................</td><td>(3)<br>உரிமம்பெற்ற அமைவிட முகவரி :-<br>.................................................................<br>.................................................................<br>............................................................</td></tr>
<tr><td colspan="2">(4) அமைவிடம் பற்றிய விளக்கம் (எல்லைகள் குறிப்பிடப்படுதல் வேண்டும்):-<br>................................................................................................................................<br>................................................................................................................................</td></tr>
<tr><td colspan="2">(5) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 18 இன் ஏற்பாடுகளின் கீழ் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை விற்பனை செய்வதற்காக உரிமம் வழங்கப்பட்டவரது பெயர்,விபரங்கள் :-</td></tr>
</table>

(6) (i) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் (அத்தியாயம் 52 ) 18ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் மேலே (4) ஆம் விடயத்தில் விபரிக்கப்பட்ட அமைவிடத்தினை இத்தால் அங்கீகரிக்கப்படுவதுடன் விடயம் (5) இல் விபரிக்கப்பட் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உற்பத்தி, களஞ்சியப்படுத்தல் மற்றும் மொத்தமாக விற்பனை என்பனவற்றிறற்காகவும் அதிகாரமளிக்கிறேன்.

(ii) பின்புறம் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இந்த உரிமம் வழங்கப்படுகிறது.

திகதி :- ............................................ ...........................................

உரிமம் வழங்கும் அதிகாரி

1. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இலங்கைக்கு இறக்குமதிசெய்யப்பட்டாலும், இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்டாலும், அதன்பேரில் உரிய தீர்வைகள் செலுத்தப்பட்டாலும் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை மொத்தமாக/சில்லறை விற்பனைக்கு மாத்திரமே இந்த உரிமப்பத்திரத்தினை நீடிப்புச்செய்தல் வேண்டும்.
2. உரிமம் வழங்கும் அதிகாரியின் சம்மதமின்றி, இந்த உரிமத்தின் அதிகார தத்துவத்தின் கீழ் நடாத்தப்படுகின்ற வியாபாரத்தடன் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் தொடர்பினை உரிமம்பெற்றவர் விற்றல், கைமாற்றுதல் அல்லது வேறு விதத்தில் அகற்றுதல் ஆகாது.
3. கணக்கு வைத்தல்- குடிபானமல்லாத ஸ்பிரீத்து ஏற்றுமதியாளர்/இறக்குமதியாளர் ஒவ்வொருவரும், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் குறிப்பாக காட்டப்பட்ட படிவத்தில் உரிய கணக்குப் புத்தகங்களை பேணுதல் வேண்டும். இந்த விதியின் கீழான அறிவித்தலொன்று தமது வியாபார நடவடிக்கையை மேற்கொள்ளும் வளாகத்தின் நிகழ்கால தலைவருக்குப் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாக கையளித்திருப்பின் அல்லது வளாக கதவில் ஒட்டியிருப்பின் குறித்த அறிவித்தலானது உரிமப்பத்திரதாரருக்கு உரிய முறையில் கையளிக்கப்பட்டுள்ளது எனக் கருதப்படல் வேண்டும்.
4. பிராந்திய மதுவரி அத்தியட்சகரினால் வழங்கப்படும் உரிமப் பத்திரமின்றி, ஏதேனும் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உரிமம்பெற்ற வளாகத்தினுள் கொண்டுசெல்லப்படலாகாது.
5. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை உரிமம் ஒன்றினைப்பெற்றிராத தனிநபரொருவருக்கு விற்பனை செய்கையில், குறித்த ஸ்பிரீத்துக்களின் அளவு 4.5 கி.கிராமிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். இதற்கு இடப்பெயர்விற்கான அனுமதிப்பத்திரம் அவசியப்படமாட்டாது.
6. இங்கு அட்டவணை 1 இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள குடிபானமல்லாத ஸ்பிரீத்து ஒன்றினை சில்லறை விலையில் விற்பனை செய்வதற்காக உரிமம் பெற்றுள்ள நபரொருவர் தமது உடைமையின் கீழ் 600 கி.கிராமுக்கு மேற்படாத அளவினை வைத்திருக்க முடியும்.

**எதிர்தரப்புடன்படிக்கை :-**

மேற்படி உரிமம்பெற்றவரான ............................................................................................ ஆகிய நான், உரிமத்தில் அடங்கியுள்ள கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளை உறுதியாக கடைப்பிடிப்பேன் எனவும் நிறைவேற்றுவேன் எனவும் உரிமம் வழங்கும் அதிகாரியுடன் இத்தால் உடன்படுகின்றேன்.

..............................................

உரிமப்பத்திரதாரர் கையொப்பம்

சாட்சியாளர்கள்:-

20................மாதம்............ஆம் திகதி.

**அட்டவணை IV**

**படிவம் IV**

## இலங்கை மதுவரித் திணைக்களம்

## மதுவரிக் கட்டளைச்சட்டம் (அத்தியாயம் 52)

### குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம்

வழங்கப்பட்ட இடம் :-......................................................................................

வழங்கப்பட்ட திகதியும் நேரமும் :- ........................................................................

உரிம செல்லுபடியாகும் காலம் :-............. முதல் பி.ப.:- ............ வரை (திகதி):-.......................

| | |
|---|---|
| (1) உரிமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கொண்டு செல்பவரின் பெயரும் முகவரியும் | |
| (2) ஸ்பிரித்துக்களைப் பெறுவதற்காக அதிகாரம் பெற்ற உரிமப்பத்திரதாரரின் பெயரும் முகவரியும் | |
| (3) ஸ்பிரித்துக்கள் கொண்டுசெல்லப்படும் இடத்தின் முகவரி | |
| (4) வழங்கப்பட்ட ஸ்பிரித்தின் வகையும் மொத்த அளவும் (கி.கிராம்) | |
| (5) ஸ்பிரித்து விநியோகிக்கப்பட்ட கொள்கலன்களின் எண்ணிக்கை (கொள்ளளவு மற்றும் விபரம் என்பனவற்றினை குறிப்பிடவும்) | |
| (6) வாகனத்தின் இலக்கம்: | |
| (7) செல்வழி | |

கீழுள்ள நிபந்தனைகள் மற்றும் மறுபக்க குறிப்பில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, அங்கீகரிக்கப்பட்டதன் பிற்பாடு(7)ம் கூட்டிலுள்ள செல்வழியே ………………. ஆம் திகதி மு.ப. ………. பி.ப……….. இடைப்பட்ட நேரத்தினுள் …………….உரிமம்பெற்ற வளாகத்திற்கு (6)ம் கூட்டில் குறிப்பிடப்பட்ட குடிபானமல்லாத ஸ்பிரித்து…………….. கி.கிராம் கொண்டுசெல்வதற்கு ………………………………(கொண்டுசெல்பவரின் பெயர்) அதிகாரம் வழங்கப்படுகிறது.

1. அனுமதிப் பத்திரத்தில் வழங்கப்பட்டுள்ள நேரம் மற்றும் திகதியில் மாத்திரம் செயற்படுத்துதல் வேண்டும்.

2. அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்படுகின்ற குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக் கொண்டுசெல்கையில் அனுமதிப்பத்திரத்தின் மூலப்பிரதியை எந்நேரமும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதுடன் அதனை மதுவரி அலுவலருக்கு ஒப்படைத்தலும் வேண்டும்.

3. இவ்வனுமதிப் பத்திரம் கைமாற்றப்படலாகாது.

4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள செல்வழியில் மாத்திரம் அதனைக் கொண்டு செல்லல் வேண்டும்.

5. குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களைக் கொண்டுசெல்கையில் வாகனம் அனர்த்தமொன்றிற்கோ

அல்லது விபத்தொன்றிற்கோ முகங்கொடுக்க நேரிடின், அனுமதிப்பத்திரத்தினை விநியோகிக்கும் அதிகாரிக்கோ அல்லது குறித்த மதுவரி பிரதேசத்தின் மதுவரி நிலையப் பொறுப்பதிகாரிக்கோ அறிவித்து அவரது வழிகாட்டலுக்கு அமைய செயற்படுதல் வேண்டும்.

6. இத்தோடு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களுக்கு முரணான வகையில் இதனைப் பயன்படுத்தக் கூடாது.
7. இவ்வனுமதிப்ப பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ஸ்பிரித்துக்கள் கொண்டுசெல்லப்படுகின்ற பிரதேசத்தில் கோப்பிலிட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

திகதி :-................................ ...............................................

உரிமம் வழங்கும் அதிகாரி

**அட்டவணைV**

ஸ்பிரித்து வகையின் பெயர் :- சிங்களம்

தமிழ்

ஆங்கிலம்




(வெள்ளைப் பின்புலத்தில் சிவப்பு நிரத்தில் அச்சடிக்கப்படல் வேண்டும்.)

**NSP - 04**

**அட்டவணை IV**

**படிவம் I**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

விண்ணப்பப்படிவ இல:-

இலங்கை மதுவரித் திணைக்களம்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளர்,

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

கொழும்பு.

**குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இறக்குமதி/ஏற்றுமதிசெய்தல்**

...............................................................................................................................(முகவரி) இல் வசிக்கும்...........................................................................................................................(முழுப் பெயர்) என்ற நபர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள குடிபானமல்லாத ஸ்பிரீத்து தொகையினை இறக்குமதி/ஏற்றுமதி செய்வது தொடர்பில் எமது திணைக்களத்திற்கு எதுவித ஆட்சேபனையுமில்லை என நான் இத்தால் பிரகடனப்படுத்துகிறேன்.

முன்னீடான பொருட்பட்டியல் இலக்கம் மற்றும் திகதி -

குடிபானமல்லாத ஸ்பிரித்துக்களின் வகை -

தொகை கி.கிராம் அளவு -

செல்லுபடியாகும் காலம் -

திகதி :-

............................................

மதுவரி ஆணையாளர் நாயகம்

**அட்டவணை VI**

**படிவம் II**

**இலங்கை மதுவரித் திணைக்களம்**

மதுவரி ஆணையாளர் நாயகம்

இலங்கை மதுவரித் திணைக்களம்

கொழும்பு,

## சுங்கச் சான்றுதழ்

ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டாளரது இல................................ கொண்ட உரிமப் பத்திரத்தின் கீழ்………………… ………………………………………………வசிக்கும்…..................................... ……………………………………………………(முழுப் பெயர்) என்பவரினால் கீழ் குறிப்பிடப்படும் குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்பதனை இத்தால் அறியத்தருகிறேன்.

கொள்கலன் இல :-

குடிபானமல்லாத ஸ்பிரீத்து வகை:-

அளவு (தொகை கி.கிராம் ˙ ):-

இயைபு முறைக் குறியீடு இல (H.S Code ):-

ஏனைய விடயம் :-

திகதி :-

………………………………………

அதிகாரம் பெற்ற சுங்க உத்தியோகத்தர்

**அட்டவணை VI**

**படிவம் III**

## இலங்கை மதுவரித் திணைக்களம்

### இறக்குமதிசெய்யப்பட்ட குடிபானமல்லாத ஸ்பிரீத்துக்களை கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரம்

1. உரிமப்பத்திரதாரரின் பெயர் :-........................................................................................................
   முகவரி:- ........................................................................................................................................
   தொலைபேசி இல :-..........................................................................................................................
   மின்னஞ்சல்:-.................................................................................................................................

2. வாகன சாரதியின் பெயர்:- ..........................................................................................................
   தே.அ.அ.இ:-....................................................................................................................................

3. ஸ்பிரித்துக்கள் கொண்டுசெல்லப்படும் இடத்தின் பெயர் மற்றும் முகவரி:-
   ……………………………………………………………………………………………………..................
   ..........................................................................................................................................................
4. குடிபானமல்லாத ஸ்பிரித்து வகை :-.........................................................................................
5. அளவு (தொகை கிலோ கிராம்):-………………………………………………………......
6. செறிவு :-
7. செல்வழி :-
8. செல்லுபடியாகும் காலம் :-............................................. முதல் ................................. வரை
9. வேறு விடயங்கள் :-
10. திகதி:-
11. வேறேதும் நிபந்தனைகள் இருப்பின்,
    ..........................................................................................................................................................
    ..........................................................................................................................................................

    மேற்குறித்த குடிபானமல்லாத ஸ்பிரித்து வகைகளை கொண்டுசெல்வதற்காக மதுவரி நிபந்தனைகளின் கீழ் அங்கீகாரம் வழங்குகிறேன்.

திகதி :-

.............................................

அதிகாரம் பெற்ற மதுவரி உத்தியோகத்தர்